சென்ற இதழ் தொடர்ச்சி...

# கல்வி விரிவாக்கமும், அதிகரித்து வரும் வேலையின்மையும்

ஆகஸ்ட் - 8, 2026 அன்று நடைபெற்ற 57-ஆவது டெல்லி ஐஐடி பட்டமளிப்பு விழாவில், 587 முனைவர் பட்ட ஆய்வாளர்கள், உட்பட 3,000-க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் பங்கேற்றனர். சிறந்த பட்டதாரிகளுக்கு ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் மற்றும் இயக்குநரின் தங்கப் பதக்கம் உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டன. பிரதமர் நரேந்திர மோடி பட்டதாரிகளிடையே உரையாற்றினார். மேலும், செயற்கை நுண்ணறிவு (AI), தரவு அறிவியல் (data science) மற்றும் பல்துறை சார்ந்த புதுமைகளில் ஆராய்ச்சியை வலுப்படுத்தும் நோக்கில், IIT டெல்லியின் சோனிபட் வளாகத்தில் நிறுவப்பட்ட உயர் செயல் திறன் கொண்ட, AI-சார்ந்த சூப்பர் கம்ப்யூட்டிங் வசதியான - பரம் பிரகாஷை (Param Prakash) அவர் தொடங்கி வைத்தார்.

அவரது உரை Gen Z இளைஞர்களுக்குப் பரிச்சயமான மொழியைக் கையாண்டது. விண்வெளித் தொழில்நுட்பம், குறைக்கடத்திகள் (semi-conductors) மற்றும் ட்ரோன்கள் போன்ற துறைகளில் முன்னோடி சாதனைகள் புரிந்ததற்காகப் பெருமிதம் கொள்ளும் வகையில், ''என் வம்சாவளியிலேயே முதல் நபர்'' (First in my bloodline) போன்ற சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டன. பட்டதாரிகள் வெறும் பட்டங்களைப் பெறுவது மட்டுமல்லாமல், நாட்டின் அபிலாஷைகளையும் முன்னெடுத்துச் செல்கிறார்கள் என்பதை அவர் வலியுறுத்தினார்.

அதே வேளையில், சமூக ஊடகங்களால் ஏற்படும் கவனச் சிதறல்கள் குறித்து மாணவர்களை எச்சரித்த பிரதமர் நரேந்திர மோடி, ''வாழ்க்கை என்பது ஒரு தரவரிசைப் பட்டியல் (leaderboard) அல்ல'' என்று கூறினார். வேலைவாய்ப்பு, புதிய தொழில்முயற்சிகள் (start - ups) மற்றும் போட்டித் தேர்வுகள் குறித்த கேள்விகள் அவர்களின் மனதில் இயல்பாகவே எழுந்திருக்கும் என்பதை உணர்ந்த அதே வேளையில், இளம் பட்டதாரிகள் எதிர்கொள்ளும் நிச்சயமற்ற தன்மைகளை நகைச்சுவையுடன் குறிப்பிடும் விதமாக, ''நான் பாபா பாகேஷ்வர் அல்லன், எதிர் காலத்தில் என்ன நடக்கும் என ஆருடம் கூற முடியாது'' என்றார். இருப்பினும் முக்கிய செய்தி நம்பிக்கை யூட்டுவதாக அமைந்திருந்தது. இந்தியாவுக்கு படித்த இளைஞர்களின் தேவை உள்ளது. அவர்களின் லட்சியங்கள் ஆக்க பூர்வமான தேசிய வளர்ச்சியை நோக்கிச் செலுத்தப்பட வேண்டும்.

### சுதந்திர தின உரை மற்றும் இளைஞர்களின் விரக்தி

பிரதமர் நரேந்திர மோடியின் சுதந்திர தின உரை மிகுந்த வேதனையும், சோகமும் நிறைந்ததாக இருந்தது. இளைஞர்களின் விரக்தியை அங்கீகரித்த பிரதமர், தேர்தல் அல்லாத வழிகளில் அரசாங்கங்களைக் கவிழ்க்க முயலும் போராட்டக்காரர்களுக்கு எதிராக எச்சரிக்கை விடுத்ததுடன், தீர்வாக இலவச இணையவழிப் பயிற்சியையும் முன்வைத்தார்! ''இந்தியாவின் அதிவேக வளர்ச்சியும், இளைஞர்களின் பலவீனமான நம்பிக்கையும் ஒரே நேரத்தில் நிலவுகின்றன'' என்று அவர் வெளிப்படுத்திய சோகம் அப்பட்டமாகத் தெரிந்தது.

செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த திறன் மேம்பாட்டிற்கு இணையான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படா விட்டால் ஏற்படும், ''தொழில்நுட்பரீதியாக மேம்பட்ட வேலையின்மை'' குறித்த விழிப்புணர்வை பிரதமர் மோடியின் உரை பிரதிபலித்தது. இளைஞர்களின் நம்பிக்கைக்குப் பெரும் சவாலாக விளங்கும் போட்டித் தேர்வுகளின் நம்பகத் தன்மையை மீட்டெடுப்பதாக அவர் உறுதியளித்தார். சில துறைகளில் திறன் கொண்டவர்களின் எண்ணிக்கை தேவைக்கு அதிகமாக இருப்பதை உணர்ந்த அவர், உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறைகளில் கவனம் செலுத்துமாறு வலியுறுத்தினார். இத்துறைகள் தமக்கென ஒரு புதிய தொழில் பிரிவாக உருவெடுக்கும் வாய்ப்பைக் கொண்டுள்ளன.

செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் தொழில்நுட்பம் மற்றும் ரோபோட்டிக்ஸ் ஆகியவற்றின் மீது அரசாங்கம் செலுத்தும் கவனம், இந்தியாவின் கல்வி முறையை வளர்ந்து வரும் தொழில்நுட்பப் பொருளாதாரத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கும் முயற்சியைப் பிரதிபலிக்கிறது. முன்மொழியப்பட்ட ரூ. 1 லட்சம் கோடி மதிப்பிலான புத்தாக்க நிதியம் (innovation fund) மற்றும் ஒரு கோடி இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவுத் திறன் பயிற்சி அளிக்கும் திட்டங்கள் ஆகியவை, தொழில்நுட்ப லட்சியங்களுக்கும் பொருளாதார வாய்ப்புகளுக்கும் இடையே பாலத்தை அமைப்பதை நோக்கமாகக் கொண்டவை. இருப்பினும், முக்கிய சவால் இன்னும் தீர்க்கப்படாமலே உள்ளது. போதுமான வேலைவாய்ப்புகள் இல்லாத நிலையில் பெறப்படும் திறன்கள், தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட வேலையின்மையின் ஒரு புதிய வடிவத்தை உருவாக்கக்கூடும்.

புத்தாக்கம், உற்பத்தி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றின் மீது பிரதமர் செலுத்தும் கவனம், கல்வி கற்ற இளைஞர்களின் வளர்ந்து வரும் எண்ணிக்கையை உள்வாங்க, இந்தியாவின் பொருளாதாரக் கட்டமைப்பு பன்முகத்தன்மை கொண்டதாக மாற வேண்டும் என்ற விழிப்புணர்வையும் பிரதிபலிக்கிறது. போட்டித் தேர்வுகளின் நம்பகத்தன்மை, சில பாரம்பரியத் துறைகளில் பட்டதாரிகளின் அதிகப்படியான எண்ணிக்கை மற்றும் உயர் பயிற்சி பெற்ற ஐஐடி மற்றும் என்ஐடி பட்டதாரிகள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போக்கு (brain drain) - ஆகிய

சிக்கல்களை நாடு ஒரே நேரத்தில் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்தியாவின் 2047 - ஆம் ஆண்டு இலக்கானது, 2026 - ஆம் ஆண்டு ஜூலை 5 - ஆம் தேதி வெளியிடப்பட்ட உலக வங்கியின் புதுப்பிக்கப்பட்ட வகைப்பாட்டு அளவுகோல்களின் அடிப்படையில், இந்தியா உயர் வருமானப் பிரிவில் இடம்பெற வேண்டும் என்ற லட்சியத்துடனும் இணைக்கப்பட்டுள்ளது. தற்போதைய இந்தியாவின் தனிநபர் வருமானம் (2,760 டாலர்) என்பது, உயர் வருவாய் பிரிவிற்கான வரம்பை (14,376 டாலர்) விட மிகவும் குறைவாக உள்ளது. இந்தப் பிரிவை எட்டுவதற்கு, ஆண்டுக்கு தற்போதைய 7 சதவிகித வளர்ச்சி விகிதத்தை விட, 10 முதல் 12 சதவிகிதம் வரையிலான அதிக வளர்ச்சி விகிதத்தில் இந்தியா வளர வேண்டும். நிலையான பொருளாதார வளர்ச்சி, உயர்ந்த உற்பத்தித்திறன், தரமான வேலைவாய்ப்புகள், வலுவான உற்பத்தி மற்றும் சேவைத் துறைகள் ஆகியவை அவசியமாகும்.

இந்தியா சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவான 2047-ஆம் ஆண்டு வரையிலான 25 ஆண்டு காலத்தை, பிரதமர் நரேந்திர மோடி ''அம்ரித் கால்'' (அமிர்த காலம், Elixir of Life) - அதாவது தேசிய மாற்றத்திற்கான ஒரு காலகட்டம் - என்று விவரித்துள்ளார். வளர்ந்த இந்தியா என்ற பரந்த தொலைநோக்குப் பார்வையின் கீழ், 2047- க்குள் இந்தியாவை ஒரு வளர்ந்த நாடாக மாற்றுவதே இதன் குறிக்கோளாகும். Gen Z தலைமுறையினரைப் பொறுத்தவரை, 2047 வரையிலான ஆண்டுகள் அவர்களின் பணி மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் மிக முக்கியமான காலகட்டமாக அமையவுள்ளன.

அடுத்த இருபது ஆண்டுகளை அவர்கள் வாய்ப்புகள் நிறைந்த காலமாகவோ அல்லது நழுவ விடப்பட்ட வாய்ப்புகளின் காலமாகவோ, எப்படி அவர்கள் எந்த விதமாக கருதுவார்களோ என்பது கேள்விக் குறிகளே! அவை யாவும், கல்வி விரிவாக்கத்துடன், உற்பத்தித்திறன் மிக்க வேலை வாய்ப்பு, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றம் என மாற்றுவதில் இந்தியா வெற்றி பெறுவதைப் பொறுத்தே அமையும்.

ஆகவே, இந்தியாவின் இளைஞர்களுக்குக் கல்வியை வழங்குவது மட்டுமல்லாமல், அவர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்து, தகுந்த ஊதியம் வழங்கி, அவர்களைத் தக்க வைத்துக் கொள்ளக் கூடிய ஒரு பொருளாதாரத்தை உருவாக்குவதே தலையாய பணியாகும்.



**- டி.கே.ஜெயராமன்**

**ஆசிய வளர்ச்சி வங்கியின்** (Asian Development Bank) **முன்னாள் மூத்த பொருளாதார நிபுணர்; தற்போது பெங்களூருவில் உள்ள அமிர்தா ஸ்கூல் ஆஃப் பிசினஸில்** (Amirta School of Business) **கௌரவ இணைப் பேராசிரியர்** (Honorary Adjunct Professor).

# புத்தக விமர்சனம்




**நூல்: வால்மீகி இராமாயணம். ஆசிரியர்: பி.எஸ்.ஆச்சார்யா. பக்கம்: 352. விலை : ரூ.250/-. வெளியீடு: புதிய புத்தக உலகம், 52-C, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை-17. ஃபோன்: 044-28158171. கைபேசி: 9840226661.**

இந்திய துணைக் கண்டத்தில் தோன்றிய இருபெரும் இதிகாசங்கள் இராமாயணமும், மஹாபாரதமும் ஆகும். மஹாபாரதத்திற்கு பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் இயற்றப்பட்டது இராமாயணம் என்று கூறப்படுகிறது. இது ஸ்ரீராமர் வாழ்ந்த காலத்திலேயே வால்மீகி முனிவரால் ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றப்பட்டது. வழிப்பறி கொள்ளையராக இருந்த வால்மீகி எப்படி மனம் திருந்தி முனிவரானார். அவருக்கு நாரத முனி ஸ்ரீராமர் கதையை எப்படி உபதேசித்தார். அதன் பிறகு நடந்த ஒரு சம்பவம், எப்படி இராமாயணத்தை இயற்ற அவரை தூண்டியது... போன்ற ஆரம்ப விபரங்களுடன் இந்நூல் தொடங்குகிறது. தவிர, நமது தமிழ்மொழி மற்றும் தமிழ் கலாசார பண்புகளின்படி வால்மீகியின் இராமாயணம் மொழிபெயர்க்கப் பெற்று, சற்றே உருமாற்றம் செய்யப்பட்டுள்ளதால், இது மற்ற படைப்புகளில் இருந்து வேறுபட்டதாகவும் உள்ளது. மனித வாழ்க்கை உயரிய ஒழுக்க நெறிகளுடன் கூடியதாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்தவே, முக்கடவுள்களில் ஒருவரான திருமால், ஸ்ரீராமராக அவதரித்து, ஒழுக்கம் தவறிய இராவணனை தண்டித்த கதைதான் இராமாயணம். இதில் ஸ்ரீராமரின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான பால காண்டம், அயோத்திய காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம், உத்தர காண்டம் - என்று ஏழு காண்டமாக விவரித்து இக்காவியத்தை வால்மீகி முனிவர் இயற்றியுள்ளார். ஆனால் ராமாயணக் கதை இயல்பாகவே ராமரின் பட்டாபிஷேகத்துடன் மங்களகரமாக முடிவடைவதால், இக்கதையைக் கூறுபவர்கள் அதற்கு மேல் தொடராமல் நிறுத்திக் கொள்வது வழக்கம். அந்த வகையில் இந்நூலிலும் இதன் ஆசிரியர் உத்தர காண்டத்தைச் சேர்க்காமல் மூல நூலாகிய வால்மீகி இராமாயணத்தை உரைநடையாக எளிய தமிழில் தந்துள்ளது சிறப்பானது.



**- பரக்கத்**